பதில்லை என்றும் தெரியவந்தது. இதுவரை வந்த தகவல்களின்படி இத்தென்னை வளர்ச்சிக் கழகம் இரசாயன உர கட்டுப்பாடு உத்தரவையோ அல்லது பூச்சி மருந்துகள் சட்டத்தையோ மீறியதாகத் தெரியவில்லை.

குத்தாலத்தில் உள்ள இந்த தென்னை வளர்ச்சிக் கழகத்தின் ஏஜென்டாக உள்ள திரு பெனிடிக்ட் என்பவர் பதினொரு விவசாயிகளிடம் தொடர்பு கொண்டு ரூ. 1635 வசூல் செய்துள்ளார் என்று தெரிய வந்தது. காவல் துறையினரை தொடர்புகொண்டதில், திரு பெனிடிக்ட் என்பவர் மீது பொது மக்களை ஏமாற்றியதாக வழக்கு ஒன்று பதிவு செய்திருப்பதாகவும் அது புலனாய்வில் இருக்கிறது என்றும் தெரிய வந்தது. இக்கழகத்தின் நடவடிக்கைகளை மிகவும் தீவிரமாக கூர்ந்து கவனிக்குமாறு மாவட்ட வேளாண்மை அலுவலர், துணை வேளாண்மை அலுவலர் (உரக்கட்டுப்பாடு) மற்றும் துணை வேளாண்மை அலுவலர் (பயிர் பாதுகாப்பு) ஆகியோருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இப்பகுதியிலுள்ள தென்னை சாகுபடியாளர்கள் இம்மாதிரியான அங்கீகரிக்கப்படாத, போலி நிறுவனங்களின் பிடியில் சிக்காமல் தங்கள் தேவைக்கு வேளாண்மைத்துறை அலுவலர்களையே அணுகுமாறு விரிவான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஈ) கல்லக்குடி கிராமத்திற்கு குடிநீர் வழங்கல் குறித்து அப்பகுதி மக்கள் உண்ணாவிரதம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திருவாளர்கள் ஏ. ஆர். மாரிமுத்து, எஸ். சதாசிவம் ஆகியோர் ஒரு கவன ஈர்ப்பு தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் இருக்கையில் இல்லாததால் திரு. சதாசிவம் அவர்கள் அதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

திரு. எஸ். சதாசிவம்: தலைவரவர்களே, திருச்சி ஜில்லா கல்லக்குடி கிராமத்திற்கு 15 ஆண்டுகாலமாக தீர்க்கப்படாமல் இருக்கும் குடிநீர் பிரச்சினைக்காக அப்பகுதியில் உள்ள பொது மக்கள் அனைவரும் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதம் மேற்கொண்டது பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, கல்லக்குடி கிராம வளர்ச்சி குழு 19-3-1978 நாளிட்டக் கடிதத்தில் போதிய அளவு குடிநீரை ஒழுங்காக வினியோகம் செய்யவும்,

630 கல்லக்குடி கிராமத்திற்கு குடிநீர் வழங்கல் குறித்து அப்பகுதி மக்கள் உண்ணாவிரதம் குறித்து.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1978 ஏப்ரல் 7

படித்தும் வேலை வாய்ப்பில்லாதவர்களுக்கு டால்மியா சிமெண்ட் கம்பெனியில் வேலை தருமாறும், இதைப்போன்று இன்னும் ஐந்து கோரிக்கைகளை உடனே கவனித்து தீர்த்து வைக்குமாறும், இல்லாவிடில் 27—3—1978 அன்று காலை 7 மணி முதல் தொடர் உண்ணாவிரதம் இருக்கப்போவதாகவும் அறிவித்தது. அவ்வாறே குறிப்பிட்ட நாளன்று உண்ணாவிரதமும் மேற்கொள்ளப்பட்டது. திருவாளர்கள் எம். பெரியசாமி உடையார், ஏ. கோவிந்த உடையார் அவர்கள் மற்றும் பலர் உண்ணாவிரதத்தில் பங்கு கொண்டனர்.

கிராம வளர்ச்சிக் குழுவின் கோரிக்கைகளில் குடிநீர் வினியோகம் பற்றிய கோரிக்கைதான் முக்கியமானது. டால்மியா கம்பெனிக்கு குத்தகைக்கு விடப்பட்ட சர்வே எண்.268/1-ல் உள்ள தரிசு நிலத்தில் தோண்டப்பட்ட கிணற்றின் காரணமாக கிராமத்தில் போதுமான அளவு குடிநீர் கிடைப்பதில்லை என்றும், நிலத்தடி நீரின் அளவும் குறைந்துவிட்டது என்றும் டால்மியா சிமெண்டு கம்பெனி போதிய அளவு குடிநீர் வினியோகம் செய்ய வேண்டுமெனவும் கிராம வளர்ச்சிக் குழு கோரியுள்ளது.

இது சம்பந்தமாக திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரின் கருத்துரையைக் கேட்டதற்கு அவர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

கல்லக்குடி கிராமத்தில் தற்போதைய மக்கட்தொகை சுமார் 11,000 கிராமத்தில் மொத்தம் மூன்று குடிநீர் கிணறுகள் உள்ளன. மொத்தம் 7625 காலன்கள் கொள்ளளவு உடைய மூன்று மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் குழாய்கள் மூலம் இணைக்கப்பட்டு டால்மியா சிமெண்டு கம்பெனி குடிநீர் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. கோடையில் கிராமத்தில் உள்ள கிணறுகளின் நீர் மட்டம் குறைந்துவிடுவதால், குடிநீருக்கு அவ்வூர் மக்கள் டால்மியா சிமெண்டு கம்பெனியின் குடிநீர் திட்டத்தையே நம்பி இருக்கிறார்கள். தற்சமயம் கிணறுகளில் உள்ள நீர் 15 நாட்களுக்கே போதுமானது.

டால்மியா சிமெண்டு கம்பெனி கொள்ளிடத்திலிருந்து கிடைக்கும் நீரை பயன்படுத்துகிறது. இதைத் தவிர, அக்கம்பெனிக்கு 1960-ஆம் ஆண்டு முதல் 20 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களில், சர்வே எண். 268/1-ல் உள்ள தரிசு நிலத்தில் தோண்டப்பட்ட கிணற்றிலிருந்தும் நீரை எடுத்துக் கொள்கிறது. மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளை காலை, மாலை இரு வேளைகளிலும் மூன்று மணி நேரம் நிரப்புவதின் மூலம் கிராம மக்களுக்கு குடிநீர் வழங்க ஏற்கனவே இக்கம்பெனி இசைந்துள்ளது. ஆனால், இரு வேளைகளிலும் இரண்டு மணி நேரங்களுக்கு மட்டுமே அக்கம்பெனியால் குடிநீர் வினியோகம் செய்யப்படுவதாக கிராம மக்கள் தெரிவிக்கிறார்கள். ஆகவே, போதுமான அளவு குடிநீரை சீரான முறையில் வினியோகிக்க கோருகின்றனர்.

திருச்சிராப்பள்ளி கூடுதல் மாவட்ட ஆட்சியர் கல்லக்குடி கிராம வளர்ச்சி குழுவின் உறுப்பினர்களுடனும், டால்மியா சிமெண்டு கம்பெனியின் பிரதிநிதிகளுடனும், இது சம்பந்தமாக விவாதித்தார். விவாதத்திற்குப் பின்னர் போதிய அளவு குடிநீர் வினியோகம் பற்றிய கோரிக்கையின் மீதும், மற்றுமுள்ள இதரக் கோரிக்கைகளின் மீதும் உரிய நடவடிக்கை உடனே மேற்கொள்ளப் படும் என உறுதி அளிக்கப்பட்டது. அதன் பின்னர் 28-3-78 அன்று மாலை 5 மணியளவில் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. குத்தகைக்கு விடப்பட்டுள்ள தரிசு நிலத்தில் உள்ள கிணற்றி லிருந்து எடுக்கப்படும் தண்ணீருக்கு டால்மியா கம்பெனி தண்ணீர் கட்டணம் ஏதும் செலுத்துவதில்லை எனத் தெரிய வருகிறது. மேற்கூறிய கிணறு அமைந்திருக்கும் நிலத்தின் பகுதி யினை மட்டும் கம்பெனிக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ள நிலத் தின் பகுதியிலிருந்து நீக்குவதற்கான சாத்தியக்கூறுகளை மாவட்ட ஆட்சியர் ஆய்ந்து வருகிறார். அவ்வாறுசெய்வதின் மூலம்அக்கிணறு கல்லக்குடி கிராம மக்களுக்கு நிரந்தர குடிநீர் ஆதாரமாக அமைய முடியும். தேவைப்பட்டால் கம்பெனிக்கும் தண்ணீர் கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு தண்ணீர் வழங்க முடியும். மேற்கூறிய ஏற்பாடுகள் மூலம் கல்லக்குடி கிராமத்தின் குடிநீர் பிரச்சனைக்கு ஓர் நிரந்தரமான தீர்வு காண முடியும். இதைத் தவிர கல்லக்குடி பேரூராட்சிக்கு ஆழ்துளை கிணறுகள் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் ஒன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது. தற்சமயம் அவ்விடத்தில் அமைதி நிலவுகிறது.

(2) கதர் விற்பனைமையங்கள் மூடலும், அதனால் பணியாளர்கள் பாதிப்பும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, டாக்டர் கே. சமரசம், திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் ஆகியோர் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். டாக்டர். கே. சமரசம் அவர்கள் அதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, கதர்-கிராமத் தொழில் ஆயத்தின் மூலம் மாநிலத்தில் பல்வேறு இடங்களில் இயங்கிவரும் கதர் விற்பனை மையங்கள் மூடப்படுவது குறித்தும், அதனால் பணியாளர்கள் பாதிக்கப்படுவது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி பஞ்சாலை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, தமிழ்நாடு - கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் தற்பொழுது 171 கதர் - கிராமத் தொழில் விற்பனை நிலையங்கள் இம்மாநிலத்